திருப்புவனம் ஒன்றியத்திலுள்ள கண்மாய்கள்

* 487 வின—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் கண்மாய் (மராமத்து செய்து) ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆழப்படுத்தும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை. ஆனல் இக்கண்மாய்க்கு மராமத்து வேலைகள் செய்ய ரூ. 32,000 மதிப்பீட்டில் வேலை முன்னேற்றத்தில் உள்ளது.

* 488. வின—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பழையனூர் கண்மாய் மராமத்துக்கான மதிப்பீடு எவ்வளவு?

(இ) இவ்வேலை எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) ரூ. 20,000.

(இ) அடுத்த நிதி ஆண்டில் மதிப்பீட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் சுமார் மூன்று மாத காலத்துக்குள் முடிக்கப்படும்.

* 489 வின—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பிரமனூர் கண்மாயை மராமத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இவ்வேலைக்கான மதிப்பீடு தல அதிகாரிகளால் ரூ. 24,900-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மராமத்து வேலை செய்யப்பட்டு வருகிறது.